Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 357/2023 Date:14.05.2026
Deposition of witness for prosecution: PW4 ( LW4)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜாமுகமது | Village | கம்பம் |
| Father/ Husband Name | சுல்தான் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 50/26 | Calling | டீ கடை |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 14.05.2026 TIME 01.35 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

அ.சா.1,2,3 ஐ தெரியும், ஆஜர் எதிரியை தெரியும். நான் வழக்கு சம்மந்தப்பட்ட சண்டையை நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 12.12.2022ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் எனது கடையில் இருந்தபோது எனது கடைக்கு தெற்கு பக்கம் சண்டை போடும் சத்தம் கேட்டு, நான் கடைக்கு வந்து வெளியே வந்து பார்த்த போது அ.சா.1, 2 என்பவர்களுடன் எதிரி அசிங்கமான வார்த்தையால் திட்டி, கடைக்கு பின்னால் ஆடு மேய்த்து கொண்டிருந்தஅ.சா.1ன் அக்கா வனிதா எதிரியிடம் ஏன் அசிங்கமாக பேசிகிறாய் என எதிரியிடம் கேட்டதற்கு, எதிரி, வனிதாவை அசிங்கமாக பேசி, முடியை பிடித்துஇழுத்து கீழே தள்ளிவிட்டு கையால் அடித்தார் என்றும், உடனே நானும், பாண்டியன் மற்றும் இன்பவள்ளி என்பவரும் சேர்ந்து சண்டையை விலக்கிவிட்டு, எதிரியை அனுப்பி வைத்தோம். பின்னர் எதிரி சிறிது தூரம் நடந்து சென்ற எதிரி திரும்பி வந்து பீர்பாட்டிலை எடுத்து அ.சா.1 ஐ குத்த வந்தார் என்றும், நாங்கள் விலக்கிவிட்டோம் என்றும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.